பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 06 2025 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரேசிலில் அடுத்த மாதம் நடைபெறும் 17வது பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்கிறார்.

2. அனைத்து தரப்பு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

3. விதிமீறல் தொடர்பாக 3 உயரதிகாரிகளை பதவியில் இருந்து நீக்குமாறு ஏர் இந்தியா நிறுவனத்திற்கு சிவில் விமானப் போக்குவரத்து தலைமை இயக்குநரகம் அறிவுறுத்தியுள்ளது.

4. பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் மாநிலங்களில் அடுத்த 2 நாட்களில் தென்மேற்குப் பருவமழை தீவிரமடையும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன் போட்டி இன்று கொழும்பில் தொடங்குகிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

பிரேசிலில் அடுத்த மாதம் நடைபெறும் 17வது பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்கிறார்.

இந்தப் பயணத்தின்போது பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தலைவர்களுடன் பொருளாதார ஒத்துழைப்பு, பன்முகத்தன்மை மற்றும் தீவிரவாத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு திரட்டுவது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இடம்பெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே மொராக்கோ, அர்ஜென்டினா, பிரேசில், ட்ரினிடாட்-டொபாகோ மற்றும் ஜோர்டான் நாடுகளுக்கு அரசுமுறைப் பயணமாக அடுத்த மாதம் 2ஆம் தேதி புறப்பட்டுச் செல்கிறார்.

9 நாட்கள் மேற்கொள்ளவுள்ள இந்தப் பயணத்தில் முதற்கட்டமாக மொராக்கோ செல்லும் அவர், அந்நாட்டு தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

மொராக்கோ நாட்டிற்கு பயணம் மேற்கொள்ளும் இரண்டாவது இந்திய பிரதமர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து அர்ஜென்டினா செல்லும் அவர், இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்து அந்நாட்டு அதிபருடன் பேச்சு நடத்துகிறார்.

<<<<>>>>

நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களின் மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

நாக்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முந்தைய அரசுகள் கடந்த 60 ஆண்டுகளில் நிறைவேற்றாத திட்டங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு 11 ஆண்டுகளில் செய்து முடித்துள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தொழில்துறையினருக்கு உதவிடும் வகையில் மத்திய அரசின் கொள்கைகள் அமைந்துள்ளதாக அவர் கூறினார்.

ஏற்றுமதி அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்து கவனம் செலுத்தப்படும் என்றும், சரக்குப் போக்குவரத்திற்கான செலவுகள் இந்த ஆண்டு இறுதிக்குள் 9 சதவீதம் வரை குறையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நாட்டின் முன்னேற்றத்தில் பெண்களின் பங்களிப்பை உறுதி செய்யும் வகையில் 33 சதவீத இடஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதையும் திரு. நிதின் கட்கரி சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

முருக பக்தர்கள் மாநாடு மதுரையில் இன்று நடைபெறுகிது.

உலகம் முழுவதிலுமிருந்து முருக பக்தர்களை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த மாநாடு நடத்தப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த மாநாட்டில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன், தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, பிஜேபி தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத், ஆந்திரப்பிரதேச துணை முதலமைசச்சர் திரு. பவன் கல்யாண், புதுச்சேரி மாநில ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் உள்ளிட்ட பலர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்கின்றனர்.

மலேசியா, இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மற்றும் மாநிலங்களில் இருந்து ஏராளமானோர் இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக மதுரை பாண்டிகோயில் சாலையில் உள்ள மாநாட்டுத் திடலில் அறுபடை முருகன் கோவிலின் மாதிரிகள் கண்காட்சிகளாக அமைக்கப்பட்டுள்ளன.

இன்று மாலை 6 மணிக்கு ஒரே நேரத்தில் லட்சக்கணக்கான பக்தர்கள் ஒன்றிணைந்து கந்தசஷ்டி கவசத்தைப் பாடி கின்னஸ் சாதனை படைக்க உள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

இந்த மாநாட்டில் 5 லட்சத்துக்கும் அதிகமானோர் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா அனைத்து துறைகளிலும் வளர்ச்சியடைந்து வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

தமிழகத்தின் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள தனியார் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கிப் பேசினார்.

2047ஆம் ஆண்டில் இந்தியா வல்லரசு நாடாக உருவெடுக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மகளிர் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை டாக்டர் எல். முருகன் பட்டியலிட்டார்.

<<<<>>>>

திறமையாள இளைஞர்களைக் கொண்ட மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

விருதுநகரில் நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்பு முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிப் பேசினார்.

மாணவர்கள் உயர்கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் வகையில் மாநில அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

போட்டித் தேர்வுகளுக்கு மாணவர்களை தயார் செய்யும் வகையில் நூலகங்கள் மற்றும் அறிவுசார் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக திரு. தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

<<<<>>>>

இஸ்ரேல் – ஈரான் இடையேயான மோதல் தீவிரமடைந்து வரும் நிலையில், ஈரானில் உள்ள 3 அணு உலைகள் அமைந்துள்ள பகுதிகளில் அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளது.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்டுள்ள பதிவில் **Fordo, Natanz** மற்றும் **Isfahan** ஆகிய 3 இடங்களில் வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

விமானிகளின் பணி தொடர்பான பட்டியலை தயாரிப்பதில் உள்ள விதிமுறைகளை மீறியதற்காக 3 உயரதிகாரிகளை அனைத்துப் பொறுப்புகளில் இருந்து நீக்குமாறு ஏர் இந்தியா நிறுவனத்திற்கு சிவில் விமானப் போக்குவரத்து தலைமை இயக்குநரகம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அந்த இயக்குநரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த அதிகாரிகள் மீது கால தாமதமின்றி ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இதுகுறித்த விவர அறிக்கையை 10 நாட்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமான நிறுவனத்தின் செயல்பாடுகளில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளுக்கு இந்த அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

<<<<>>>>

எகிப்து வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் **Badr Abdelatty** இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக நாளை இந்தியா வருகிறார்.

அவரது இந்தப் பயணத்தின்போது வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

எகிப்து வெளியுறவு அமைச்சரின் இந்தப் பயணத்தால் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகள் மேலும் வலுப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் மாநிலங்களில் அடுத்த 2 நாட்களில் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைவதற்கான சாதகமான சூழல் நிலவி வருவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தப் பருவமழை படிப்படியாக தில்லி உட்பட நாட்டின் பிற பகுதிகளிலும் பரவலாகும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த 3 நாட்களுக்கு கன முதல் அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மிசோரமில் அசாம் ரைஃபில்ஸ் மற்றும் இதர அமலாக்கத் துறைகளால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் 12 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக 2 பெண்கள் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**Vaseikai** பகுதியில் இருந்து **Lunglei** பகுதிக்கு போதைப்பொருள் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் போதைப்பொருள் தடுப்புப் படை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டதாக பாதுகாப்புத்துறை செய்தித்தொடர்பாளர் தெரிவிக்கிறார்.

இவை தவிர மேலும் 2 சோதனை நடவடிக்கையில் 81 லட்சம் ரூபாய் மதிப்பிலான வெளிநாட்டு சிகரெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஈரானில் சிக்கி தவித்து வரும் இலங்கை மற்றும் நேபாள நாட்டைச் சேர்ந்தவர்களை பத்திரமாக தாயகம் திரும்ப உதவி செய்த இந்தியாவுக்கு அந்நாடுகள் நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளன.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவு செய்துள்ள நேபாள நாட்டைச் சேர்ந்த மாணவி, ஈரானில் இருந்து வெளியேறுவதற்கு இந்தியா உதவி செய்ததாகவும், இது இரு நாடுகளுக்கும் இடையேயான வலுவான உறவுகளை பிரதிபலிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக ஈரானில் இருந்து இலங்கை மக்கள் பத்திரமாக தாயகம் திரும்ப உதவியதற்காக அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சகம் நன்றி தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - ஈரான் மோதல் நடைபெற்று வரும் நிலையில் ஈரானில் இருந்து ஆபரேஷன் சிந்து நடவடிக்கையின் மூலம் இதுவரை ஆயிரத்து 117 பேர் இந்தியா அழைத்துவரப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பிரேசிலின் தென் பகுதியில் உள்ள **Santa Catarina** பகுதியில் ராட்சத பலூன் வெடித்து ஏற்பட்ட விபத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அம்மாகாண ஆளுநர் **Jorginho Mello** விபத்து நடந்த இடத்திற்கு மீட்புப் படையினர் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த ராட்சத பலூனில் 22 பேர் பயணம் செய்ததாகவும், அவர்களை மீட்கும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

<<<<>>>>

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பொருளாதார சீரமைப்பு நடவடிக்கைகளுக்கான அடுத்தகட்ட நிதி உதவியை சர்வதேச செலாவணி நிதியத்திடம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்நாட்டு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. அனில் ஜெயந்தா ஃபெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். இது தொடர்பாக சர்வதேச செலாவனி நிதியம் விதித்துள்ள நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதனடையே நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் நடப்பாண்டின் முதல் காலாண்டில் நான்கு புள்ளி 8 சதவீதம் வளர்ச்சிடைந்துள்ளதாக திரு. அனில் ஜெய்ந்தா ஃபெர்னாண்டோ தெரிவித்தார்.

<<<<>>>>

ஆசிய ஸ்நூக்கர் சாம்பியன் போட்டி இன்று கொழும்பில் தொடங்குகிறது.

இப்போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி, பராஸ் குப்தா, புஷ்பேந்தர் சிங் உள்ளிட்ட வீரர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

ஆசிய ஜூனியர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா மேலும் 5 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது.

வியட்நாமில் நடைபெற்ற இப்போட்டியில் ஆடவர் 61 கிலோ எடைப்பிரிவில் நிகிலும், 65 கிலோ எடைப்பிரிவில் சுஜித்தும், 74 கிலோ எடைப்பிரிவில் ஜெய்தீப்பும், 79 கிலோ எடைப்பிரிவில் சந்தர் மோகனும், 92 கிலோ எடைப்பிரிவில் சச்சினும் இப்பதக்கங்களை வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா 11 தங்கம், 6 வெள்ளி மற்றும் 3 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

<<<<>>>>

ப்ரோ லீக் ஹாக்கிப் போட்டியில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவு ஆட்டங்களில் இந்தியா இன்று பெல்ஜியம் அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

பெர்லினில் நடைபெற்று வரும் நான்கு நாடுகள் பங்கேற்கும் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று இங்கிலாந்து தனது முதல் இன்னிங்சின் ஆட்டநேர இறுதியில் 3 விக்கெட் இழப்புக்கு 209 ரன் எடுத்துள்ளது.

லீட்சில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா முதல் இன்னிங்சில் 471 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

<<<<>>>>

தஜிகிஸ்தானில் நடைபெற்ற 23 வயதுக்கு உட்பட்டோருக்கான சர்வதேச நட்புணர்வு கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற இந்தியா – கிர்கிஸ்தான் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் கோல் எதுவுமின்றி டிரா ஆனது

**<<<<The end>>>>**